**செய்தி வெளியீடு எண்: 830** **நாள்: 13.11.2018**

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, அரசு உறுதிமொழிக் குழுவின் ஆய்வுக்கூட்டம் 13.11.2018 அன்று சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்திலுள்ள குழுக்கூட்ட அறையில் நடைபெற்றது. அரசு உறுதிமொழிக்குழுவின் மாண்புமிகு தலைவர் திரு. I.S.இன்பதுரை, இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களது தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், உறுதிமொழிக்குழுவின் உறுப்பினர்களும் உயர்கல்வித்துறையின் முதன்மைச் செயலாளர் திரு. மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., சட்டப்பேரவை செயலாளர் திரு.K. சீனிவாசன் மற்றும் உயர்கல்வித்துறையின் உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர். ஆய்வுக்கூட்டத்தைத் தொடர்ந்து அரசு உறுதி மொழிக்குழுவின் மாண்புமிகு தலைவரும், மாண்புமிகு உறுப்பினர்களும், சட்டபேரவை செயலாளர், உயர்கல்வித்துறையின் உயர் அலுவலர்களும், சென்னை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்திலுள்ள பி.எம். பிர்லா கோளரங்கத்தில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் மேம்பாட்டுப் பணிகளை ஆய்வு செய்தனர். பி.எம்.பிர்லா கோளரங்கத்தில் அமைக்கப்பட்டு வரும் ஒருங்கிணைந்த கோளரங்கக் கருவியில் இயந்திர வகை ஒளிப்படக் கருவி மூலம் இரவு வானின் விண்மீன்களையும், விண்மீன் மண்டலங்களின் வடிவங்களையும், கோள்களின் நகர்வுகளையும், சுழற்சி, அட்சரேகை மற்றும் தினசரி வான் நகர்வுகள் ஆகியவற்றை உருவாக்கிக்காட்ட இயலும். இதன்மூலம் கடினமான வானவியல் கருத்துகளை எளிதாகக் கற்பிக்கலாம். இந்த அமைப்பில் உள்ள எண்ணிலக்கக் கோளரங்கக் கருவி மூலம் கோளரத்திரையில் முழுமையாக வான்பொருட்களின் படங்களையும், இயங்கு படங்களையும், வானவியல் நிகழ்வுகளையும் திறம்படக் காட்ட இயலும். இம்மையத்தின் செயல் இயக்குநர் (பொ) முனைவர்.ச.சௌந்தரராஜப்பெருமாள், மேற்கண்ட தகவல்கள் மற்றும் இம்மையத்தின் செயல்பாடுகள் குறித்து உறுதிமொழிக்குழுவின் மாண்புமிகு தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விளக்கிக் கூறினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**